DT Next

Dated: 05.07.2024

# Average votes of LS poll winners drop by two per cent

**NEW DELHI: The winners of Lok Sabha elections 2024 won an average of 50.58 per cent votes, down by 2 per cent as compared to the last general elections, according to an analysis by the poll rights body ADR.**

Among the elected MPs with declared criminal cases, 42 per cent won with a vote share of 50 per cent and above, the ADR report said.

The Association for Democratic Reforms (ADR) and National Election Watch (NEW) have released a comprehensive analysis of the vote share in the Lok Sabha Elections 2024, examining 542 out of 543 constituencies. The Surat constituency in Gujarat was excluded from the analysis as its candidate was elected unopposed.

**The winners of the Lok Sabha elections in 2024 represent, on an average, 33.44 per cent of the total electorate**

The winners in the 2024 Lok Sabha elections secured an average of 50.58 per cent of the total votes polled, a decrease from 52.65 per cent in 2019.

Notably, 279 winners (51 per cent) achieved more than half of the total votes in their constituencies, while 263 winners (49 per cent) failed to reach the halfway mark.

Among the major parties, the BJP had 75 out of 239 winners (31 per cent) securing less than 50 per cent of the vote share. For the Congress, 57 out of 99 winners (58 per cent) won with less than 50 per cent votes.

Among regional parties, 32 out of 37 winners (86 per cent) from Samajwadi Party, 21 out of 29 winners (72 per cent) from All India Trinamool Congress, and 14 out of 22 winners (64 per cent) from Dravida Munnetra Kazhagam won with less than 50 per cent of the vote share.

Out of the 251 winners with declared criminal cases, 106 (42 per cent) won with a vote share of 50 per cent and above, while 173 out of 291 winners (59 per cent) with clean backgrounds secured more than 50 per cent of the vote share.

Among the 503 crorepati winners, 262 (52 per cent) won with a vote share of 50 per cent and above, while 17 out of 39 non-crorepati winners (44 per cent) achieved the same.

The winners of the Lok Sabha elections in 2024 represent, on average, 33.44 per cent of the total electorate, down from the 35.46 per cent in 2019.

This indicates a decrease in the representativeness of elected candidates when compared to the number of eligible voters.

The voter turnout for the Lok Sabha elections 2024 was recorded at 66.12 per cent, a slight decrease from the 67.35 per cent turnout in the 2019 elections.

Deccan Chronicle

Dated: 05-07-2024

# Ministers flock to Vikravandi, rile opposition

G. BABU JAYAKUMAR, D. SEKAR | DC
CHENNAI, JULY 4

With less than a week left for the by-election to the Vikravandi Assembly constituency, the fight intensifies with the Naam Tamilar Katchi, (NTK), headed by Seeman, writing to the chief electoral officer listing out the alleged violations of the Model Code of Conduct by the ruling DMK and demanding action against the party.

The party's lawyers' wing alleged that the DMK had vitiated the atmosphere in the constituency by unleashing 10 ministers and 25 party district secretaries among the electorate and also regularly herding the people into marriage halls every day from morning to evening and locking them up there with a view to preventing the candidates and workers or rival parties meeting them to seek votes.

In the complaint to the CEO, they said the party bigwigs were not just staying inside the constituency but were overseeing the irregularities like detaining people in marriage halls like cattle and birds all through the day. The people were provided food and paid Rs 300 before being allowed to go home, they said.

Besides, the DMK was giving away free dress and jewels to the voters as a bribe and despite several complaints, no action had been taken against them by the authorities.

P7




PMK leader Anbumani Ramadoss addressing the media at Katpadi in Vellore district on Thursday. — K. Senthil Nathan

Daily Thanthi

Dated: 05.07.2024

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# பா.ம.க.வுக்கு வாக்களிக்க கூடாது என மக்களை மிரட்டுகிறார்கள்

## தி.மு.க. அமைச்சர்கள் மீது டாக்டர் ராமதாஸ் குற்றச்சாட்டு

திண்டிவனம், ஜூலை.5- விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பா.ம.க.வுக்கு வாக்களிக்க கூடாது என தி.மு.க. அமைச்சர்கள் மக்களை மிரட்டுகிறார்கள் என்று டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

### தி.மு.க.வுக்கு தோல்வி உறுதி

திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் தி.மு.க. அரசுக்கு எதிராக மக்கள் கடுமையான கோபத்திலும், கொந்தளிப்பிலும் இருக்கும் நிலையில், விக்கிரவாண்டி தொகுதியில் தோல்வி உறுதி என்று தி.மு.க. அஞ்சுகிறது. இதனால், சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுகிறது.

டாக்டர் அன்புமணி ராமதாஸ் பிரசார கூட்டத்துக்கு யாரும் செல்லக்கூடாது என்பதற்காக பொதுமக்களை பிடித்து தி.மு.க. அலுவலகத்தில் அடைத்து வைப்பது, பா.ம.க., அ.தி.மு.க. நிர்வாகிகளைத் தாக்குவது, பா.ம.க.வுக்கு வாக்களித்தால் 100 நாள் வேலைத் திட்டத்தில் வேலை வழங்க மாட்டோம் என மிரட்டுவது, ஊராட்சி மன்றத் தலைவர்கள் பா.ம.க.வுக்கு தேர்தல் பணியாற்றினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படாது என அச்சுறுத்துவது போன்ற செயல்களில் தி.மு.க. அமைச்சர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

### பொது எதிரி

ஆனால், இதையெல்லாம் முறியடிக்கும் வகையில் பா.ம.க.வினர் கிராமம் கிராமமாக சென்று வாக்கு சேகரித்து வருகின்றனர். அதனால், தி.மு.க.வின் அனைத்து அத்துமீறல்களையும் முறியடித்து பா.ம.க வேட்பாளர் சி.அன்புமணி 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். அ.தி.மு.க., பா.ம.க. ஆகிய இரு கட்சிகளுக்கும் பொது எதிரி தி.மு.க. தான். எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் தி.மு.க.வை தீயசக்தி என்று தான் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு கற்றுக் கொடுத்தனர். அந்த தீயசக்தி இந்த தேர்தலில் வென்று விடக் கூடாது. விக்கிரவாண்டியில் அதை வீழ்த்தும் சக்தி பா.ம.க.வுக்கு தான் உண்டு. எனவே, அ.தி.மு.க.வினர் அனைவரும் அவர்களது வாக்குகளை வீணடிக்காமல் தி.மு.க.வை வீழ்த்துவதற்காக பா.ம.க.வுக்கு மாம்பழம் சின்னத்தில் செலுத்த வேண்டும்.

### பதவி விலக வேண்டும்

தமிழ்நாட்டில் சமூகநீதியைக் காக்க சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியது அவசியம். அதை செய்ய முடியா விட்டால் தோல்விக்கு பொறுப்பேற்று தி.மு.க. அரசு பதவி விலக வேண்டும்.

மாணவர்கள் மீது நீட் தேர்வை திணித்த பாவத்திலிருந்து தி.மு.க.வும், காங்கிரசும் தப்பிவிட முடியாது. நீட் தேர்வு விவகாரத்தில் தமிழக மாணவர்களுக்கு செய்த துரோகத்திற்காக மக்களிடம் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார்.

PMK party person Thiru Dr. Ramadoss accuses DMK ministers that he threaten people not to vote for PMK party.

Daily Thanthi

Dated : 05.07.2024

காலையில் இருந்து அடைத்து வைக்கப்படும்

# விக்கிரவாண்டி வாக்காளர்களுக்கு தினமும் ரூ.300, உணவு பொட்டலம்

## தி.மு.க. மீது நாம் தமிழர் கட்சி புகார்

சென்னை, ஜூலை.5-

சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரியிடம் நாம் தமிழர் கட்சியின் வக்கீல் பிரிவு மாநில செயலாளர் சங்கர் கொடுத்த புகாரில் கூறியிருப்பதாவது:-

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்ற உச்சகட்ட வெறியில் ஆளும் தி.மு.க கட்சி தொடர்ந்து சட்டம் மற்றும் தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரான செயலில் ஈடுபட்டு வருகிறது. 10-க்கும் மேற்பட்ட அமைச்சர்கள், 25-க்கும் மேற்பட்ட தி.மு.க. மாவட்ட செயலாளர்கள், அந்த தொகுதியில் தங்கியுள்ளனர். அவர்கள் தங்களின் அதிகாரத்தை பயன்படுத்தி, வாக்காளர்களை கோவில் மற்றும் திருமண மண்டபங்களில் ஆடு, மாடு போல் காலையில் இருந்து அடைத்து வைத்து, மாலையில் கையில் ரூ.300 மற்றும் இரவு உணவை கொடுத்து அனுப்புகின்றனர். அவர்களிடம் மாற்றுக்கட்சியினர் வாக்கு கேட்கும் வாய்ப்பையும் தடுக்கின்றனர். இந்த செயலை தட்டிக் கேட்ட எங்கள் கட்சியினர் மிரட்டப்படுகின்றனர்.

மேலும், இலவச வேட்டி, சேலை, மூக்குத்தி உள்ளிட்ட பரிசுப்பொருட்களையும் கொடுத்து வருகின்றனர். இதுகுறித்து தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதையெல்லாம் போலீஸ் வேடிக்கை பார்ப்பதோடு, உறுதுணையாகவும் உள்ளனர். இதற்கான வீடியோ, புகைப்பட ஆதாரங்கள் உள்ளன. எனவே தேர்தல் நடத்தை விதி மீறலுக்கு துணைபோகும் மாவட்ட கலெக்டர், போலீஸ் அதிகாரி ஆகியோரை ஒட்டுமொத்தமாக இடமாற்றம் செய்து, உடனடியாக மத்திய பாதுகாப்புப் படைகளை ஈடுபடுத்தி பணப்பட்டுவாடாவை தடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

NTK party complaint DMK party that they are giving 300Rs food for vikravandi voters.

Dinamalar

Dated: 05-07-2024

# லோக்சபா தேர்தல் செலவு ஊராட்சி நிர்வாகம் திணறல்

திருப்பூர், ஜூலை 5–

லோக்சபா தேர்தலின் போது ஓட்டுச் சாவடிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொண்ட செலவினங்களுக்கு தொகை வழங்கப்படாததால், ஊராட்சி நிர்வாகங்கள் தவிக்கின்றன.

லோக்சபா தேர்தல் ஓட்டுப்பதிவு ஏப்., 19ம் தேதி நடந்தது. இதில், ஓட்டுச் சாவடிகளாக அரசு பள்ளிகள், நிதியுதவி பெறும் பள்ளிகள், கல்லுாரிகள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. ஓட்டுச் சாவடிகளில் வாக்காளர்கள் வசதிக்காக உரிய ஏற்பாடுகள் செய்ய மாநில தேர்தல் கமிஷன், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தியது.

மாவட்ட தேர்தல் அலுவலர்கள் உரிய ஒன்றிய நிர்வாகங்கள், ஊராட்சி பகுதியில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், ஊராட்சி பொது நிதியில் இதை செய்து கொள்ளவும் என அறிவுறுத்தப்பட்டது. ஊராட்சி பகுதியில் உள்ள ஓட்டுச் சாவடிகளில், ஷாமியானா பந்தல் அமைத்தல், உதவி மையம் அமைத்தல், குடிநீர், கழிப்பறை, மின் இணைப்புகள், விளக்குகள் உள்ளிட்ட குறைந்தபட்ச வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இதற்காக ஊராட்சி அமைப்புகள் செலவு செய்தன. தேர்தல் ஓட்டுப்பதிவு, ஓட்டு எண்ணிக்கை அனைத்தும் முடிந்து, மத்தியில் புதிய அரசு ஆட்சி அமைத்தும் விட்டது.

ஆனால், ஊராட்சி அமைப்புகளுக்கு தேர்தல் பணிக்கு செலவிட்ட தொகை விடுவிக்கப்படாமல் உள்ளது. ஏற்கனவே நிதி நெருக்கடியில் திணறி வரும் ஊராட்சி அமைப்புகளுக்கு இது, மேலும் கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

Loksabha election expenses stifle panchayat administration due to the amount spent on election work to panchayat organizations has not been released.

Dinamalar
Dated: 05.07.2024

# ஆளுங்கட்சி அத்துமீறல்களுக்கு துணை போகும் கலெக்டர், எஸ்.பி.,

## நாம் தமிழர் கட்சி புகார் மனு

சென்னை, ஜூலை 5–

'விழுப்புரம் கலெக்டர் மற்றும் எஸ்.பி.,யை இடமாற்றம் செய்ய வேண்டும்' என, நாம் தமிழர் கட்சி சார்பில், தலைமை தேர்தல் அதிகாரியிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் வழக்கறிஞர் பிரிவு செயலர் சங்கர் அளித்துள்ள மனு:

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, தி.மு.க., தொடர்ந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. 10க்கும் மேற்பட்ட அமைச்சர்கள், 25 மாவட்டச் செயலர்கள் தொகுதியில் தங்கி, பொதுமக்களை ஆடு, மாடுகளைப் போல், கோவில் மற்றும் திருமண மண்டபங்களில் அடைத்து வைக்கின்றனர்.

மாலை அவர்களை விடுவிக்கும்போது, 300 ரூபாய் பணம், இரவு உணவு கொடுத்து அனுப்புகின்றனர். மாற்று கட்சியினர், அவர்களிடம் ஓட்டு கேட்கும் வாய்ப்பை தடுக்கின்றனர். இதை தட்டிக் கேட்ட நாம் தமிழர் வேட்பாளர் அபிநயா மற்றும் நிர்வாகிகளை, குண்டர்கள் வாயிலாக மிரட்டுகின்றனர்.

மேலும், வாக்காளர்களுக்கு வேட்டி, சேலை, மூக்குத்தி மற்றும் பரிசுப் பொருட்களை வினியோகம் செய்கின்றனர். இது குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை. அத்துமீறல்களை காவல் துறை வேடிக்கை பார்ப்பதுடன், அவர்களுக்கு உறுதுணையாக செயல்படுகிறது. வரும் நாட்களில் தொகுதி முழுதும், ஓட்டுக்கு பணம் கொடுக்க தயாராகி வருகின்றனர்.

அனைத்து விதிமீறல்களுக்கும் துணை போகும் கலெக்டர் மற்றும் எஸ்.பி.,யை இடமாற்றம் செய்ய வேண்டும். அங்கு, மத்திய தொழில் பாதுகாப்பு படையினரை, பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

தொகுதியில் அனுமதியின்றி செயல்படும், தி.மு.க., தேர்தல் பணிமனைகள் அகற்றப்பட வேண்டும். அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

NTK party Complaint CEO that DEO, S.P are favour to the Ruling party.